


# பனசை மு. சாமிநாதன்

இவர் இன்றையத் தஞ்சை மாவட்டத்தில் குடந்தையை வாழ்விடமாகக் கொண்டவர். தமிழாசிரியராகப் பணி நிறைவு கண்டவர். இவர், பனசை எனப்படும் திருப்பனந்தாளில் இலங்கும், காசி மடத்தின் புலவராவார். தெள்ளியத் தமிழறிவு கொண்டவர்.

சைவத் திருமுறைகள் ஓதி, திருமணம் நடத்தி வைக்கும் சீரியப் பணியைச் செய்து வருகிறார். தன்னுடைய மகளின் திருமணத்தையுமே அங்கனம் நிகழ்த்தினார். திருமணம் அனைத்து வைதீக சடங்குகளையும் கொண்டதாக இருக்கும். வடமொழி மந்திரங்களுக்குப் பதிலாக ஓத்த, சைவ, தேவாரத் திருவாசகப் பாடல்களை இசைப்பர்.

இவருடையச் சீரிய தமிழ்ப் பணியைப் பாராட்டி, இவர் பெற்றப் பட்டங்கள் எண்ணிலடங்கா. திருவாவடுதுறை ஆதீனம், திருமுறை பாரதி, எனவும் சூரியனார் கோயில் ஆதீனம், சைவ ஒளிச்சுடர், எனவும் வழங்க, திருப்பனந்தாள் மடம் இவருக்கு சைவத் தமிழ் மாமணி எனும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. இத்துடன், இவருக்கு சைவ நெறிப்புலவர், நகைச்சுவை செல்வர் ஆகியப் பட்டங்களும் வழங்கப்பட்டுச் சிறப்பு செய்யப்பட்டுள்ளார்.





# தமிழ் அமிழ்து!

*தமிழ் தமிழ் தமிழ் என*
*விடாது தொடர்ந்து உச்சரிப்பின்,*
*வருவது? அமிழ்து அமிழ்து அமிழ்து*
*அது உண்மைதானோ!*

*அன்னைத் தமிழ் அமிழ்து தானே!*
*அதில் இல்லை ஐயம் தானே!*
*அகிலமெல்லாம் இல்லை இல்லை*
*அண்டமெல்லாம் வியாபித்து*

*சூழ்ந்துள்ள தேன்சுவையை;*
*அள்ளித் தந்த 'செந்தமிழ்'*
*ஆருக்கும் கிடைக்காத கருவூலம்,*
*அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரம்!*

*எடுக்க எடுக்கப் பெருகும் முத்துக் குவியல்!*
*உலகினிலே பலமொழிகள் செப்பமுறா*
*நிலையுண்டு,*
*நிலையான எழுத்து சொல் இலக்கணம்*
*நிறைவாகச் சொன்னதுடன்,*
*வாழ்வியலுக்கு இலக்கணத்தை,*
*பொருள் அதிகாரம் தந்த நூல்,*
*தொல்காப்பியம் அதன் உள்ளடக்கம்*
*பல்காப்பியம்!*
*அகத்தியனார், இறையனார்*
*வகுத்திட்ட இலக்கணங்கள்,*
*நந்தமது பெருஞ்சொத்து,*
*நானிலத்தின் அருஞ்சொத்து!*

*அணிவகுக்கு அவை பின்னே*
*பத்துப் பாட்டு எட்டுத் தொகையும்,*
*முத்தான தமிழ் நூல்கள் – நமது*
*சொத்தான விரி நூல்கள்!*

*ஐம்பெரும் காப்பியங்கள்,*
*அழகு சிறு காப்பியங்கள்!*
*ஆர் மொழியில் இவையுண்டு?*
*ஆதாரம் அஃதுண்டோ?*

*நீதிநூல் பதினெட்டு*
*நெஞ்சள்ளும் கீழ்க்கணக்கு,*
*உண்ணவும் உறங்கவும்;*
*ஓதவும் நீராடவும்;*
*வழிபாடு செய்யவும்,*
*வகுத்திட்ட நீ(நிய)தி நூல்கள்!*

பரம் பொருள் பாதமலர்,
பக்தியுடன் பரவிடவே,
பன்னிரண்டு திருமுறைகள்!
சித்தாந்த சாத்திரங்கள்!
அடியவர்கள் அறுபத்து மூவர்,
அவர்தமது சரித்திரங்கள்!

ஆழ்வார்கள் தமிழமிழ்தம்
அற்புதமாம் 'வான்' அமிழ்தம்!
அதற்கமைந்த வியாக்யானம்,
இதற்குண்டோ நிகர் எங்கும்?

இதன் பின்னே பிரபந்தம்,
எழில் மிக்க சிற்றிலக்கியங்கள்!
உலா, தூது, பரணிமடல்,
பிள்ளைத்தமிழ், அம்மானை,
கலம்பகம், கோவை, குறவஞ்சி,
ஊசல், தாண்டகம்,
எழுகூற்றிருக்கை என்பன,
முதலான தமிழ்ச் சோலை!
நுழைந்திட்டால், தமிழ் மணமே!
நுகர்ந்திடலாம் கவி மணமே!

உலகமொழி பலநூறு,
LKG நிலையினிலே,
கலைநிறையும் தமிழ் மொழியோ
ஏழெட்டு PhD!
அதன் பின்னும் முது முனைவர்!
அடுத்துவரும்; அடுக்கிவரும்;
அத்தமிழின் சாதனைகள்;
அப்பப்பா! அடங்காது,
அடுக்கி நான் சொன்னாலும்!

- **பனசை மு. சாமிநாதன்**